டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 21.11.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 129 | Madurai | Online Edition

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் முயற்சி

புது தில்லி, நவ.20

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கிராமப்புற இந்தியாவை வலுப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் குறித்தும் விவரிக்கும் கட்டுரையைப் பிரதமர் நரேந்திர மோடி சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் எழுதிய ஒரு கட்டுரையில், கடந்த 12 ஆண்டுகளில் உள் நாட்டிலேயே தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு வருவது குறித்தும், தொற்றுநோய்களில் இருந்து கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் அவை முக்கியப் பங்கு வகிப்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்து உள்ளார்.

இந்த முயற்சிகள் மூலம் கால்நடைகளின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது எனவும் நோய்களால் ஏற்படும் இழப்புகள் குறைக்கப்படுகின்றன என்றும் இது விவசாயிகளின் வருமானம் அதிகரிக்க உதவுகிறது என்றும் அவர் கூறியுள்ளார். இதனால் விவசாயக் குடும்பங்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலேயே தடுப்பூசிகளைத் தயாரிப்பது, கால்நடைப் பராமரிப்புத் துறையில் இந்தியாவின் வளர்ந்து வரும் திறனைக் காட்டுகிறது என்று அவர் கூறியுள்ளார். வலுவான, தற்சார்பு கொண்ட வேளாண் கட்டமைப்பை உருவாக்குவதில் இந்தியா கொண்டுள்ள உறுதியையும் இது வெளிப்படுத்துகிறது என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி



நாமக்கல், நவ.20

நாமக்கல் மாவட்டம், எலச்சி பாளையம் வட்டாரம், வேளாண்மை துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் முசிறி கிராமத்தில் ஒருங் கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா, தலைமை வகித்து வேளாண்மைத் துறை சார்ந்த மத்திய, மாநில திட்டங்கள், தனி குறியீடு வழங்கும் முகாம் நடைபெறுதல், பிரதம மந்திரி கௌரவ நிதி திட்டம், பயிர் காப்பீடு பதிவு பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். இப்பயிற்சியில் வைத்தியலிங்கம், துணை வேளாண்மை அலுவலர் (ஓய்வு) கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் விவசாயி களின் வருமானம் இரட்டிப்பு ஈட்டுதல் பற்றி விவசாயிகளுக்கு விளக்க மளித்தார். இப்பயிற்சியில் சிவக்குமார், துணை வேளாண்மை அலுவலர், நுண்ணீர் பாசன திட்டத்தை பற்றி கூறினார். பயிற்சியில் சக்திவேல், உதவி வேளாண்மை அலுவலர், இடுப்பொருட்கள் இருப்பு விவரம் மற்றும் உயிர் உரங்கள் பயன்பாடுகள் பற்றி விவசாயி களுக்கு கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர், அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றியும் உழவன் செயலி பதிவிறக்கம் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் கூறினர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர், அட்மா திட்ட அலுவலர்கள் திவாகர், தமிழ்ச்செல்வன் மற்றும் வாசுகி ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் கிராமபுற அனுபவ பயிற்சிக்காக எலச்சிபாளையம் வட்டாரத்திற்கு வருகைப் புரிந் திருக்கும் PGP–வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஆதிகேசவன், அருள்முருகன், அழகுராஜ், தேவநாதன், ஹரிஹர சுதன், தினேஷ்வரன், ஜெயந்தன் ஆகியவர்கள் கலந்து கொண் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு, பண்ணைக் கழிவுகள் மறுசுழற்சி பற்றி தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

சம்பா நெற்பயிர் காப்பீடு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு : வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, நவ.20

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் 2026-27 ஆம் ஆண்டு சம்பா பருவ நெற்பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசம் டிசம்பர் 1 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. குத்தகை விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து விவசாயிகளும் ஆதார் ஓடிபி விவசாய அடையாள எண் இன்றி காப்பீடு பதிவு செய்யலாம் என மாவட்ட ஆட்சியர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சம்பா நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.558.52 பிரீமியத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

தாங்கள் கடன் பெறும் வங்கிகளிலும் கடன் பெறாதவர்கள் பொது சேவை மையங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் வணிக வங்கிகள் மூலமாகவும் பதிவு செய்யலாம். மேலும் www.pmfby.gov.in இணைய தளத்திலும் பதிவு செய்-யலாம்.

சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டிசம்பர் 1 ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து பயன்பெறுமாறும், கடைசி நேர சிரமங்களை தவிர்ப்பதற்கும், பயிர் இழப்புகளுக்கான காப்பீடு பாதுகாப்பை பெறுவதற்கும் விவசாயிகள் குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு முன்பே பயிர் காப்பீடு பதிவு செய்து செயல் முறையை நிறைவு செய்யுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் தகவல் தெரிவித்துள்ளார்.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

ஆடுகளுக்கு எதிரான தடுப்பூசி அட்டவணை (ஆண்டு முழுவதும்)

நோய்க்கான பொதுவான காரணங்கள்

1. வெள்ளாடுகளை நெருக்கமாக கொட்டகையில் அடைத்து வைப்பதால்

2. கொட்டகையில் காற்றோட்டம் குறைவாக இருந்தால்

3. புதிதாக வாங்கிய ஆடுகளை ஏற்கனவே உள்ள ஆடு களுடன் சேர்ப்பதால்

4. நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகளை மற்ற ஆடுகளுடன் சேர்த்து வைப்பதால்

5. மீதமான அரிசி, சோறு மற்றும் மாவுப் பொருட்களை அதிக அளவில் தீவனமாக கொடுத்தால்

6. தக்க தருணத்தில் குடற்புழு நீக்கம் செய்யாது விட்டு விடுவதால்

7. நோய்த் தடுப்பு ஊசிகளை போடாமல் விடுவதால்

வரிசை எண்.	*நோய் மற்றும் தடுப்பூசி பெயர்*	*முதல் தடுப்பூசி*	*மாதம்*
1.	கோமாரி நோய்	3 மாதத்தில்	மார்ச், செப்டம்பர்
2.	அம்மை நோய்	3 மாதத்தில்	ஜூன்
3.	துள்ளுமாரி நோய்	3 மாதத்தில்	ஜூலை
4.	நீலநாக்கு நோய்	3 மாதத்தில்	ஆகஸ்ட்
5.	வெக்கை நோய் / ஆட்டுக்கொல்லி நோய்	3 மாதத்தில்	நவம்பர்

தகவல் : ***முனைவர் அ.ஷீபா, முனைவர் பி.என்.ரிச்சர்டு ஜெகதீசன், முனைவர் தா.லூர்து ரீத்தா, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம், புதுக்கோட்டை.***

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி

கடலூர், நவ.20

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 20.11.26 அன்று, ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார் கோவில் மற்றும் குமாராட்சி வட்டாரத்தில் உள்ள மழவராயநல்லூர், திருச்சின்னபுரம் மற்றும் ஊ.அரசூர் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.



இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர் கண்ணன், முனைவர்கள் சத்திய நாராயணன் மற்றும் கமலக்கணணன் ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்குஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மைதுறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோவில் மற்றும் குமாராட்சி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

விவசாயத்தில் ஆளில்லா விமானத் தொழில்நுட்பம் நேரில் கண்டு கற்ற வேளாண் மாணவர்கள்

தஞ்சாவூர், நவ.20



தஞ்சாவூர் மாவட்டம், காசாநாடு புதூர் கிராமத்தில் உள்ள விவசாய வயலுக்குச் சென்ற போது, பயிர்களுக்குத் தேவை யான ரசாயன மருந்துகள் ஆளில்லா விமானம் மூலம் தெளிக்கப்படுவதை நேரில் பார்வையிட்டோம். ஆளில்லா விமானத்தை இயக்குபவர் அதன் மூலம் வயலில் மருந்து தெளிக்கும் முறையைச் செயல்முறை விளக்கத்துடன் செய்து காண்பித்தார்.

அப்போது, விவசாயி ஒருவர் ஆளில்லா விமான மருந்துத் தொட்டியைத் திறந்து, தேவையான ரசாயன மருந்துகளை ஒரு வாளியில் கலந்து, பின்னர் அந்தக் கலவையை ஆளில்லா விமானத் தொட்டியில் நிரப்பினார். ஒரு ஆளில்லா விமான மருந்துத் தொட்டியின் கொள்ளளவு 10 லிட்டர் எனத் தெரிவித்தார்.

இதன் மூலம் விவசாயத்தில் ஆளில்லா விமானம் எவ்வாறு செயல்படுகிறது, ரசாயன மருந்துகளை எவ்வாறு நிரப்பி வயல்களில் தெளிக்கிறது மற்றும் அதன் பயன்பாடுகள் என்னென்ன என்பது குறித்து நேரடியாகக் கண்டு அறிந்துகொண்டோம். இந்த அனுபவம் நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்த நடைமுறை அறிவைப் பெற உதவியாக இருந்தது.

கொடிக்குளம் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வு

மதுரை, நவ.20

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவிகள் தங்களது கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக உசிலம்பட்டி தாலுகா, செல்லம் பட்டி வட்டாரத்தின் கீழ் உள்ள கொடிக்குளம் கிராமத்தின் விவசாயி களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். செல்லம்பட்டி வட்டார வேளாண்மை உதவி அலுவலர் (AAO) சின்னமாயன் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் (BTM) சண்முகப்பிரியா அகியோரின் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.



கொடிக்குளத்தில் பிரதான பயிராக நெல் சாகுபடி செய்வ தால், இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக திருந்திய நெல் சாகுபடி, அதனை ஊக்குவிக்கும் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட நெற்பயிருக்கு உரியதான TNAU Rice Bloom பற்றியும் விவரங்கள் மாணவிகளால் விளக்கப் பட்டது. இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தேவையான தகவல் களைப் பெற்றனர். மேம்பட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பான தங்களது சந்தேகங்களையும் கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டனர்.



மண்வள மேலாண்மை என்ற தலைப்பில் அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான பயிற்சி

கிருஷ்ணகிரி, நவ.20

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், கொண்டப்பன நயனப்பள்ளி கிராமத்தில் மண்வள மேலாண்மை குறித்து பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார், தலைமையில் மண்வள மேலாண்மை குறித்து பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை அலுவலர் பவித்ரா, பேசுகையில் பசுந்தால் உரப் பயிர்கள் அதாவது தக்கைபூண்டு, சணப்பை போன்ற பசுந்தால் உர பயிர்களை வளர்த்து மடக்கி உழ வேண்டும். மேலும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, அசோட்டோ பாக்டர் போன்றவற்றை பரிந்துரைக்கப்பட்ட முறையில் பயன்படுத்த வேண்டும். வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் குணசேகர், மண் பரிசோதனை செய்ய வேண்டும், ஒவ்வொரு முறை பயிர் செய்யும் போது மண்பரிசோதனை அவசியத்தை பற்றியும் மண்பரிசோதனை முடிவுகள் அடிப்படையில் வழங்கப்படும் மண்வள அட்டையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவுபடி மட்டுமே உரங்களை இட வேண்டும்.

இது தேவையற்ற உர செலவை குறைத்து மண் மலடாவதை தடுக்கிறது. மண்பரிசோதனை மூலம் மண்ணின் அமிலதன்மை மற்றும் காரத்தன்மை சத்துக்களின் அளவை துல்லியமாக அறியலாம். வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் உதயன் பேசுகையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை ரசாயன உரங்களை மட்டும் நம்பி இருக்காமல் தொழுஉரம், மண்புழு உரம் மற்றும் உயிர் உரங்களை சமச்சீராக பயன்படுத்த வேண்டும். வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியாவை மேற்பகுதியில் இடுவதால் தழைச்சத்து வீணாவதை தடுக்கப்படுகிறது. வேளாண்மை துணை இயக்குனர் கலா, பேசுகையில் பயறு வகை பயிரை சுழற்சி முறையில் சாகுபடி செய்வதன் மூலம் மண்ணில் இயற்கையாகவோ தழைச்சத்து நிலைநிறுத்தப்படுகிறது. இயற்கை பூச்சி விரட்டிகளை பயன்படுத்துவதன் மூலம் மண் சூழலை பாதுகாக்கும் என்று கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சுவாதி, வேளாண்மை துறை திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், கிரிஜா ஆகியோர் செய்திருந்தனர்.

வாழைக் கன்று நேர்த்தி பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல் விளக்கம்!

திருநெல்வேலி, நவ.20

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் வட்டாரம், பனங்குடி கிராமத்தில் வசிக்கும் விவசாயி தெரேசாவின் வாழை தோட்டத்தில் மாணவர்கள் வாழைக்கன்று நேர்த்தி பற்றிய செயல் விளக்கத்தை வழங்கினர். இந்த செயல் விளக்கத்தினை கிள்ளி குளம் வ.உ.சி.வேளாண்மை கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான ஹரிஹரசுதன், ஹரிஷ் ராகவேந்திரா, ஜெய காந்த், ஜெயநாத், ஜெபிஸ்டோ எபினேசர், ஜெய சரவணன், ஜெகன், கலையரசன், மற்றும் அசுத்தோஸ் குமார் ஆகியோர் பேராசிரியர் எபினேசர் பாபு ராஜனின் ஆலோசனைப்படி விவசாயிகளுக்கு வழங்கினர்.



செயல்முறை

வாழைக் கன்றுகளின் அடிப்பகுதியுள்ள வேர்களை நீக்கிட வேண்டும். வாழைக் கன்றுகளின் மேல் பகுதியுள்ள தண்டுப் பகுதி 20 செ.மீ இருக்குமாறு தேர்ந்தெடுக்கவும். பிரித்தெடுக்கப் பட்ட வாழைக் கன்றுகளை 0.1% கார்பென்டாசிம் (1 கிராம்/லிட்டர் தண்ணீர்) கரைசலில் 15-20 நிமிடங்கள் நனைத்து வைக்க வேண்டும். வாழைக்கன்றுகளை 4 பங்கு களிமண் மற்றும் 5 பங்கு தண்ணீர் கொண்ட கரைசலில் நனைக்க வேண்டும். பின் 40 கிராம் கார்போஃபியூரான் 3G துகள்களை வாழைக்கன்று களின் மீது தூவ வேண்டும். குறைந்தது 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி நடவும்.

பயன்கள்

நடவு செய்வதற்கு முன் வாழை உறிஞ்சிகளை முன்கூட்டியே நேர்த்தி செய்வதால் நோய் தடுப்பு, நூற்புழு கட்டுப்பாடு மற்றும் மேம்பட்ட தாவர நிறுவுதல் உள்ளிட்ட பல நன்மைகளை வழங்கு கிறது. குறிப்பாக, ஃபுசேரியம் வாடல், மற்றும் நூற்புழுக்களின் தொல்லைகளைக் கட்டுப்படுத்த உதவும். இது இறுதியில் ஆரோக்கியமான மற்றும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட வாழை செடிகளுக்கு வழிவகுக்கிறது.

விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற சிறப்பு முகாம்

புதுக்கோட்டை, நவ.20

பொன்னமராவதி வட்டார விவசாயிகள் அடையாள எண்ணை விரைவில் பதிவு செய்ய வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கா.ரஹ்மத் நிஷா பேகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

விவசாயிகள் அனைவரும் தங்களது ஆதார் எண்ணுடன் நில விவரங்களை இணைத்து விவசாய அடையாள எண்ணை பதிவு செய்திட வேண்டும். ஏற்கனவே பதிவு செய்துள்ள விவசாயிகள் தங்களது அனைத்து நில உட்பிரிவு எண்களையும் இதில் தவறாமல் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள். விவசாய அடையாள எண் பதிவு செய்தால் மட்டுமே மத்திய மாநில அரசுகளின் பல்வேறு வேளாண் நலத் திட்டங்கள், உர மானியங்கள், பயிர்க் காப்பீடு மற்றும் பாரத பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் தவணைத் தொகைகள் தொடர்ந்து தடையின்றி கிடைக்கப் பெறும்.

மேலும் தங்களது அனைத்து நில உட்பிரிவுகளையும் ஒன்றாக இணைத்தால் மட்டுமே உர விற்பனை நிலையங்களில் இருந்து தங்களுக்கு தகுதியான அளவு உரங்களை பெற்றுக் கொள்ள இயலும்.

அதன்படி இப்பகுதி விவசாயிகள் பயனடையும் வகையில் கிராம நிர்வாக அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம், வோளண்மை விரிவாக்க மையம் – பொன்னமராவதி, காரை யூரில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் நேரடி பட்டா உள்ள விவசாயிகள் விடுபட்டிருந்தால் தங்களது ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட செல்போன் எண், கணினி சிட்டர் உள்ளிட்ட ஆவணங்களை கொடுத்து மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

இத்தகவலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய்- தடுப்பது எப்படி?



தென்னையில் முக்கியமாக பொருளாதார இழப்பு மற்றும் உடனடி பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நோய்களில் இதுவும் ஒன்று. இதை தஞ்சாவூர் வாடல் நோய் அல்லது தண்டழுகல் நோய் (BASAL STEM END ROT) என்றும் அழைக்கலாம். இது கேனோடெரமா லூசிடம் (GANODERMA LUCIDUM) என்ற அறிவியல் பெயர் கொண்டது.

நோயின் அறிகுறிகள் (SYMPTOMS OF DISEASE)

ஆரம்ப நிலை அறிகுறிகள்

தென்னம் ஓலை வாடல், ஓலைகள் மஞ்சள்நிற மடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் போன்றவைகள் தென்னை மரத்தில் உண்டாகும். அதை தண்டின் அடிப் பகுதியின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து, அது மேல் நோக்கி பரவும். கசியும் பகுதியின் திசுக்கள் மென்மையாக இருக்கும். சாறு கசியும் பகுதியின் திசுக்கள் அழுகி தண்டின் அடிப்பகுதியும் அழுகும். மரப்பட்டை எளிதில் உடையக்கூடியதாக மாறி அடிக்கடி செதில்களாக உரித்து திறந்த வெளி வெடிப்பு மற்றும் பிளவுகள் தோன்றும். மரத்தின் உட்புறத் திசுக்கள் சிதைந்து தூர் நாற்றம் வீசும். தண்டின் அடிப்பகுதியில் அரைத்தட்டு காளான் (BRACKET FORMATION) வித்து தோன்றும் கடைசியில் மரம் மடிந்து விடும்.

முருங்கிணைந்த முறையில் கட்டுபாடு?

1) உழவியல் முறை

நோய் பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றி அழித்து விட வேண்டும். பசுந்தாள் உரங்களை தோப்பில் விதைத்து அவை பூக்கும் முன்னதாக தோப்பிலே அவற்றை ரோட்டோ வேட்டர் கொண்டு மடக்கி உழவு செய்ய வேண்டும். மரத்தை சுற்றி 4 அடி பள்ளம் தோண்டி மரத்தை தனிமைப்படுத்த வேண்டும்.

2) உயிரியல் முறை

சூடோமோனோஸ் புளோரோசன்ஸ் (PF1) 200 கிராம் விதம் டிரைக்கோடெர்மா விரிடி 200 கிராம் கலந்து தூரை சுற்றி ஊற்ற வேண்டும். 200 கிராம் பாஸ்போபேக்டிரியா + 200 கிராம் அசோட்டோ பாக்டிரியா 50 கிராம் தொழு உரத்துடன் கலந்து இடவும். தொழு உரத்துடன் வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ விதம் ஒரு மரத்திற்கு இடவேண்டும்.

3) இரசாயன முறை

தண்டின் சாறு கசியும் பகுதிகளை செதுக்கி டிரைடிமார்ப் 5% (CALIXIN) கொண்டு பாதுகாக்கலாம். அதைத் தொடர்ந்து சூடான தாரை ஊற்றலாம் அல்லது காப்பர் சல்பேட் 1 கிலோ 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். 1 மி.லி ஹெக்சோகோன சோல் + 100 மிலி தண்ணீரில் கலந்து வேர் மூலமாக (ROOT FEEDING) செலுத்தலாம். அல்லது மரத்தை சுற்றி 1.5 மீட்டர் உயரத்தில் 1% போர்டோ கலவையை 40 மி.லி என்ற அளவில் தூர் பகுதியில் ஊற்ற வேண்டும்.

இந்த நோய் முதன்முதலாக தஞ்சாவூர் பகுதியில் தோன்றிய தால் இதற்கு தஞ்சாவூர் வாடல் நோய் என்ற பெயர் வந்ததாக தகவல்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



வேளாண் செயலிகள் மற்றும் ஆலோசனைகள் பற்றி வேளாண் மாணவர்கள் கள விளக்கம்



திருச்சி, நவ.20

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரத்தில், நாளந்தா வேளாண்மை கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் செ. ஆதித்யன், பெ.அன்பழகன், செ.தேவஅபிஷேக், க.தினேஷ், வி.மதுபாலன், செ.நிரஞ்சன், சு.ராஜேந்திர பிரசாத், அ.விஜயசாரதி, ரா.விஜேஷ், அ.விமல்ராஜ் மற்றும் கு.விஷ்ணு பிரசாத் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பிரிவாக, திண்ணியம் கிராமத்தில் வேளாண் செயலிகள் மற்றும் ஆலோசனைகள் பற்றி விவசாயிகளுக்கு மாணவர்கள் களவிளக்கம் செய்தனர். உழவன் செயலி, எம்–வேளாண்மை, மேகதூத் செயலி, அக்ரி ஸ்டாக், கிசான் சாரதி, பாண்டா செயலி போன்ற வேளாண் செயலிகளை பயன்படுத்தும் முறை, அதன் செயல்பாடுகள் மற்றும் நன்மைகள் குறித்து வேளாண் கல்லூரி மாணவர் பெ.அன்பழகன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

கூடச்சேரியில் விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், நவ.20

கரூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், கிராமப்புற வேலைவெளிப் பயிற்சித் திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்திற்குட்பட்ட கூடச்சேரி கிராமத்தில் விவசாயிகள் கூட்டம் நடத்தி, விவசாயிகளின் குறை களை கேட்டறிந்தனர். இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் வயல்களில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை மாணவர்களிடம் எடுத்துரைத் தனர். மயில்களால் ஏற்படும் பயிர்ச் சேதம், தென்னை மரங்களில் காணப்படும் காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டு தாக்குதல், தென்னையில் குரும்பை உதிர்தல், மரவள்ளியில் குரங்கு சேதம், மண்ணின் வளம் குறைதல் மற்றும் மரவள்ளியில் வேர் கரையான் தாக்குதல் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவசாயிகள் தெரிவித்தனர்.



விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்த மாணவர்கள், அடுத்தடுத்த கிராமப் பயணங்களில் உரிய தொழில் நுட்ப ஆலோசனைகள் மற்றும் பூச்சி, நோய் மேலாண்மை முறைகளை வழங்குவதுடன், தேவையான வேளாண் செயல்விளக்கங்களையும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள தாக தெரிவித்தனர். விவசாயிகளின் நேரடி அனுபவங்கள் மூலம் வயல்வெளி பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கும் நோக்கில் இக்கூட்டம் நடைபெற்றது.



இப்கோ உர விற்பனை கட்டமைப்பு (FFS) குறித்த பயிற்சி



திருவாரூர், நவ.20

திருவாரூர் மாவட்டத்தில் தனியார் உர விற்பனையாளர் களுக்கான உர விற்பனை கட்டமைப்பு (Frame-work for Fertilizer Sales – FFS) குறித்த பயிற்சி நிகழ்ச்சி நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் (JDA), துணைஇயக்குநர் (DD SS) மற்றும் இந்திய அரசின் துணை இயக்குநர் (DD GOI) ஆகியோர் தலைமை யேற்று வழி நடத்தினர். திருவாரூர்ம ாவட்டத்தைச் சேர்ந்த தனியார் உர விற்பனையாளர்கள் இப்பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், FFS செயலியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், FFS கட்டமைப்பின் கீழ் POS இயந்திரங்கள் மூலம் உர விற்பனை மேற் கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதனுடன் இப்கோ நானோ உரங்களின் வகைகள், அவற்றின் பயன்பாடுகள், பயன்கள் மற்றும் பயிர்களுக்குப் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நானோ உரங்களைச் சரியான அளவில், உரிய முறையில் பயன் படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் பங்கேற்பாளர்களுக்கு விளக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு உழவன் செயலி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நல்லூர், நவ.20

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள், கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience – RAWE) ஒரு பகுதியாக, நல்லூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு உழவன் செயலி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் உழவன் செயலியின் முக்கியத்துவம், அதன் பயன்பாடுகள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பல்வேறு வேளாண் சேவைகள்



குறித்து விளக்கமளிக்கப்பட்டது. குறிப்பாக, மானியத் திட்டங்கள், விதை இருப்பு விவரங்கள், உரங்கள் மற்றும் இடுபொருட்கள் கிடைக்கும் விவரங்கள், வானிலை முன்னறிவிப்பு, சந்தை விலை நிலவரம், பயிர்க் காப்பீடு மற்றும் வேளாண் ஆலோசனைகள் போன்ற வசதிகளை விவசாயிகள் தங்களது கைப்பேசி மூலம் எளிதாகப் பெறும் முறைகள் எடுத்துரைக்கப்பட்டன. மேலும், செயலியைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் முறைகள் குறித்து நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களைக் கேட்டறிந்து, செயலியின் பயன்பாடுகள் குறித்துப் பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளிடையே டிஜிட்டல் வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், அரசின் வேளாண் சேவைகளை எளிதில் அணுகுவதில் உழவன் செயலியின் பங்கும் எடுத்துரைக்கப்பட்டது.

வேப்பிலைச் சாறு தயாரிப்பு மற்றும் இயற்கை பூச்சி விரட்டும் முறை குறித்த விளக்கமளித்த மாணவர்கள்



நாமக்கல், நவ.20

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்திற் குட்பட்ட பிள்ளைக்களத்தூர் கிராமத்தில், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவர்கள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு இயற்கை பூச்சி விரட்டி தயாரிப்பு குறித்த செயல் விளக்கத்தை வழங்கினர். இதில், வேப்பிலைச் சாறு (Neem Extract) தயாரிக்கும் முறையையும், அதனைப் பயிர்களில் பயன்படுத்தும் விதத்தையும் மாணவர்கள் விளக்கினர். குறிப்பாக, வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம் மற்றும் காய்கறிப் பயிர்களில் இதனை இயற்கை யான பூச்சி விரட்டியாகப் பயன்படுத்தலாம் என எடுத்துரைத்தனர்.

வேப்பிலையின் கசப்புத் தன்மை காரணமாக சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த உதவும் என்பதையும், வீட்டிலேயே குறைந்த செலவில் இதனைத் தயாரித்து பயன்படுத்தும் முறையையும் விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும், இயற்கை யான முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டு (PRA) விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருவண்ணாமலை, நவ.20

தமிழ்நாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வாழவச்சனூர், திருவண்ணாமலை மாணவிகள் பாப்பாரப்பட்டி கிராமத்தில் உள்ள ஆதிபராசக்தி கோயில் அருகே, கிராம வளர்ச்சி மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்த பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டு (PRA) நிகழ்ச்சி நடத்தினர். கிராம மக்களுக்கு அவர்களின் பகுதியில் உள்ள வளங்கள், சமூக நிலைமைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சித் தேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடத்தப் பட்டது. இதில், கிராமத்தின் தற்போதைய நிலையை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு (PRA) வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு விரிவாக விளக்கப்பட்டன.



இந்நிகழ்வின் முக்கியச் செயல்பாடாக, கிராம மக்களின் பங்களிப்புடன் குடியிருப்புகள், சாலை வசதிகள், குடிநீர் ஆதாரங்கள் மற்றும் பொது இடங்களை உள்ளடக்கிய சமூக வரைபடம் (Social Mapping) வரையப்பட்டது. மேலும், கிராம மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சனைகள் (Problem Identification) கலந்துரையாடல் மூலம் கண்டறியப் பட்டு பட்டியலிடப்பட்டன. மேலும் பிரச்சனை மரம், பார் விளக்கப் படம், கால வரிசை, பருவகால அட்டவணை, வள வரைபடம், காலவரிசை விளக்கப்படம், பயிர் சாகுபடி விளக்கப்படம், தீர்வு வரைபடம், இயக்கம் வரைபடம், பாலின விகிதம் வென் வரைபடம், கல்வியறிவு விகிதம் வென் வரைபடம் போன்ற விவரங்களை விளக்கினார்கள். இதில் திரளான கிராம மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு காளான் வளர்ப்பு மற்றும் வீட்டுக் காய்கறித் தோட்டப் பயிற்சி!



சிவகங்கை, நவ.20

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமைந்து உள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர் களான ர.சா.சபீன்ராஜ், ர.அபுகுஹாஃபா, செ. நவின், ர.ச.சொக்க லிங்கம், ம.அருண்குமார் மற்றும் செ.ஸ்ரீ பிரபு ஆகியோர், கிராமப்புற வேளாண்அனுபவத்திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் பகுதியில் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு சிப்பிக் காளான் வளர்ப்பு மற்றும் வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினர்.

இப்பயிற்சியில், சிப்பிக் காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், அதற்குத் தேவையான மூலப்பொருட்கள், வைக்கோலைப் பதப் படுத்தும் முறைகள், வளர்ப்புப்பைகள் தயாரித்தல், விதைக் காளான் இடுதல் மற்றும் வளர்ப்புப்பைகளைமுறையாகப் பராமரித் தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், காளான் வளர்ப்பிற்குத் தேவையான வெப்பநிலை, ஈரப் பதம், காற்றோட்டம் மற்றும் சுகாதாரமேலாண்மையின் முக்கியத் துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

காளானில் உள்ள புரதம், நார்ச்சத்து, வைட்டமின்கள் மற்றும் தாதுச்சத்துகள் குறித்தும் விளக்கப்பட்டது. குறைந்த இடத்தில், ஒப்பீட்டளவில் குறைந்த முதலீட்டில் காளான் வளர்ப்பை மேற் கொண்டு, அதனைச்சிறுதொழிலாக மாற்றி கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கானவாய்ப்புகள்எடுத்துரைக்கப்பட்டன. இதன் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுவினர் சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

வீட்டிலேயே காய்கறிகளைப் பயிரிட்டு, குடும்பத்திற்குத் தேவையான புதிய மற்றும் சத்தான காய்கறிகளைப் பெறும் நோக்கில் வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. வீட்டின் பின்புறம், மொட்டை மாடி மற்றும் குறைந்த இடவசதி கொண்ட பகுதிகளில் காய்கறித் தோட்டம் அமைக்கும் முறைகள் விளக்கப்பட்டன.

தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கீரை வகைகள் மற்றும் கொடிவகைக்காய்கறிகளைப்பயிரிடுவதற்கானஇடத்தேர்வு, மண் தயாரித்தல், விதைப்பு, நாற்று நடவு, நீர்ப்பாசனம் மற்றும் பயிர் பராமரிப்பு முறைகள் எடுத்துரைக்கப்பட்டன. மேலும், தொழு உரம் மற்றும் மண்புழு உரம் போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மண் வளத்தைமேம்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, முறை யான நீர் மேலாண்மை மற்றும் வீட்டில் கிடைக்கும் மட்கக்கூடிய கழிவுகளை உரமாக மாற்றிப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைப்பதன் மூலம் குடும்பச்செலவைக் குறைத்து, பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவைப் பெற முடியும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம், மகளிர் சுயஉதவிக் குழுவினர் காளான் வளர்ப்பைச்சிறுதொழிலாக மேற்கொண்டு கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கும், வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைத்து குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் தேவையான அடிப்படைத் தொழில்நுட்ப அறிவைப் பெற்றனர். மகளிரின் சுயதொழில் திறனை மேம்படுத்துதல், குடும்ப வருமானத்தை அதிகரித்தல், இயற்கை வளங்களைச்சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் நிலையான வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுடன்இப்பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை (Toxicity of Pesticides) குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி!



பண்ணைப்பள்ளி, நவ.20

அதியமான் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சியில் பயிலும் 4ம் ஆண்டு வேளாண் மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் (RAWE – Rural Agricultural Work Experience) ஈடுபட்டு வருகின்றனர். இத்திட்டம் 80 நாட்கள் நடைபெறும் களப்பயிற்சித் திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம், வேளாண் மாணவர்கள் கிராமப் புறங் களில் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவர் களின் விவசாய நடைமுறைகள், பிரச்சினைகள் மற்றும் தேவை குகளை அறிந்துகொள்வதுடன், நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

இந்த 80 நாட்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பண்ணப்பள்ளி கிராமத்தில் விவசாயிகளுக்கான பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை (Toxicity of Pesticides) குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி 15.11.26 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை, அவற்றின் வகைகள் மற்றும் அவற்றைப் பாதுகாப்பான முறையில் கையாள்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவான செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. குறிப்பாக, பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மையைக் குறிக்கும் வண்ணக் குறியீடுகள், மருந்துப் புட்டிகளில் உள்ள எச்சரிக்கை வாசகங்கள், சரியான அளவில் மருந்துகளைப் பயன்படுத்துதல், தெளிக்கும் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங் களைப் பயன்படுத்துதல் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தும்போது கையுறைகள், முகக்கவசம் மற்றும் பாதுகாப்பு உடைகளை அணிவதன் அவசியம், மருந்துகளைப் பயன்படுத்திய பிறகு கைகளைச் சுத்தமாகக் கழுவுதல், மருந்துப் புட்டிகளைப் பாதுகாப்பாக அகற்றுதல் மற்றும் குழந்தைகள், கால்நடைகள் ஆகியோருக்கு எட்டாத இடங்களில் பூச்சிக்கொல்லிகளைச் சேமித்து வைப்பதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நான்காம் ஆண்டு வேளாண் மாணவரான சகுனாஸ்.ச. பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை மற்றும் அவற்றைப் பாதுகாப்பாகக் கையாளும் முறைகளை எடுத்துரைத்து, விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தார்.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகள் பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை, அவற்றின் வண்ணக் குறியீடுகள் மற்றும் பாது காப்பான பயன்பாட்டு முறைகள் குறித்த நடைமுறை அறிவைப் பெற்றனர். மேலும், பூச்சிக்கொல்லிகளால் ஏற்படக்கூடிய பாதிப்பு களைத் தவிர்த்து, பாதுகாப்பான முறையில் அவற்றைப் பயன் படுத்துவதற்கான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நான்காம் ஆண்டு வேளாண் மாணவர்களான வசந்த்குமார்.தா., சஞ்சய்.ர., தனுஷ்ராஜ்.த., பரணிதரன்.சே., வீராசாமி.கா., சஞ்சய்.ர., திருமலை. ரா., ரஞ்சித்.ப., ராகுல் கணேஷ்.ப. மற்றும் சஷ்மிதன்.ந. ஆகியோர் உடனிருந்து செயல் விளக்க நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

தென்னை மரத்தில் பூச்சி மேலாண்மை குறித்து வேளாண் மாணவர்கள் செயல்முறை விளக்கம்

நாமக்கல், நவ.20

செம்பனை வண்டுகளின் தென்னை மற்றும் பனை மரங்களைத் தாக்கி அழிக்கும் ஒரு முக்கிய பூச்சியாகும்; இதன் வாழிடம் மரங்களின் உட்பகுதி மற்றும் சேதமடைந்த பகுதிகள் ஆகும்.

செம்பனை வண்டுகளின் முட்டைகளும் புழுக்களும் மரங்களின் தண்டின் உட்பகுதி, குருத்து மற்றும் இலைக்கன்றுகளின் மடிப்புப்





பகுதிகளில் தங்கி வாழ்கின்றன. மரங்களில் ஏற்படும் காயங்கள் அல்லது வெட்டப்பட்ட பகுதிகள் இவற்றின் இனப்பெருக்க இடமாக மாறுகின்றன. வெப்பமண்டல ஈரப் பதமான சூழ்நிலைகளில் இவை மிக விரைவாகப் பெருகுகின்றன.

மரங்களை வெட்டும்போது அல்லது பராமரிக்கும்போது காயங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; காயங்கள் ஏற்பட்டால் உடனடியாக தார் அல்லது போர்டோ கலவை பூச வேண்டும்.

வெட்டப்பட்ட அல்லது நோய்வாய்ப்பட்ட மரக்கழிவுகளைத் தோட்டத் திலேயே போட்டு வைக்காமல் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு 1 முதல் 2 என்ற கணக்கில் பெரோமோன் பொறிகளை வைத்து ஆண் மற்றும் பெண் வண்டுகளை ஈர்த்து அழிக்கலாம். தாக்குதலின் தொடக்க நிலையில் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை மரத்தின் வேர்கள் மூலமாகவோ அல்லது தண்டின் வழியே உட்செலுத்தலாம். மரத்தின் உச்சிப் பகுதி முழுமையாக அழுகிவிட்டால், அருகில் உள்ள மற்ற மரங்களுக்குப் பூச்சி பரவுவதைத் தடுக்க அந்த மரத்தை வேரோடு வெட்டி அழிக்க வேண்டும்.

சுரைக்காய் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி!



கிருஷ்ணகிரி, நவ.20

கிருஷ்ணகிரி மாவட்டம், கீழ் பையூர் கிராமத்தில் சுரைக்காய் சாகுபடியில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்களைக் கண்டறிந்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (Integrated Pest Management – IPM) பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் திரு வண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் செயல்பட்டு வரும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர் களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் வாயிலாக இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கி.கீதா மற்றும் பேராசிரியர்கள் முன்னிலை யில், வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியின் முக்கிய நோக்கம் சுரைக்காய் சாகுபடியில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்களை ஆரம்ப நிலையிலேயே கண் டறிதல், பொருளாதாரச் சேதத்தைத் தவிர்த்தல் மற்றும் தேவையற்ற பூச்சிக்கொல்லிப் பயன்பாட்டைக் குறைத்தல் ஆகியவையாகும். இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளின் வயல்களுக்கு நேரடியாகச் சென்று சுரைக்காய் பயிரைத் தாக்கும் முக்கியப் பூச்சிகளான சுரைக்காய்ப் பழ ஈ, அசுவினி, வெள்ளை ஈ மற்றும் இலை உண்ணும் பூச்சிகள் குறித்தும், அவற்றின் தாக்குதல் அறிகுறிகள், வாழ்க்கைச் சுழற்சி மற்றும் பயிரில் ஏற்படுத்தும் சேதங்கள் குறித்தும் மாணவர்கள் விளக்கமளித்தனர்.

மேலும், பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்தல், தாக்கு தலின் ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிதல், பாதிக்கப்பட்ட தாவரப் பகுதிகளை அகற்றுதல், வயல் சுகாதாரத்தைப் பேணுதல் மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்துதல் போன்ற ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகள் குறித்து எடுத்துரைக்கப் பட்டது. குறிப்பாக, சுரைக்காய்ப் பழ ஈக்களைக் கண்காணித்து கட்டுப் படுத்துவதில் இனக்கவர்ச்சிப் பொறிகளின் முக்கியத்துவம் குறித்துச் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், தேவையின் அடிப்படை யில் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளைப் பயன் படுத்துதல், சரியான அளவு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. இரசாயனப் பூச்சிக்கொல்லிகளை மட்டும் சார்ந்திராமல், உயிரியல், இயந்திரவியல், பண்பாட்டு மற்றும் தேவைக்கேற்ற இரசாயன முறைகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதன் மூலம் பூச்சித் தாக்குதலைத் திறம்படக் கட்டுப்படுத்த முடியும் என்பதை மாணவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

பயிற்சியின் நிறைவில், விவசாயிகள் தங்களது வயல்களில் எதிர் கொள்ளும் பூச்சித் தாக்குதல் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்களைக் கேட்டறிந்து, அவற்றுக்குப் பேராசிரியர் களும் மாணவர்களும் உரிய தொழில்நுட்ப விளக்கங்களையும் பரிந்துரைகளையும் வழங்கினர். இப்பயிற்சி, விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, சுரைக்காய் சாகுபடியில் பூச்சிக்கொல்லிகளின் தேவையற்ற பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் நிலையான மற்றும் இலாபகரமான வேளாண்மையை ஊக்கு விக்கும் வகையில் அமைந்தது.

நெற்பயிரில் தண்டு துளைப்பான் மேலாண்மை குறித்த செயல்விளக்கம் செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், நவ.20 திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், செயல்படுத்தப் பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்களான அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின், ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் நெற்பயிரைத் தாக்கும் தண்டு துளைப்பான் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்விளக்கம் அளித்தனர்.

இச்செயல்விளக்கத்தில் தண்டு துளைப்பான் பூச்சியால் நெற்பயிரில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் குருத்து காய்தல் (Dead Heart), வெண்கதிர் (White Ear Head) போன்ற தாக்குதல் அறிகுறிகள், மேலும், பூச்சித் தாக்குதலை ஆரம்ப நிலையி லேயே கண்டறியும் முறைகள், பாதிக்கப்பட்ட தண்டுகளை அகற்றுதல், இனக்கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்துதல், வயல் சுகாதாரத்தைப் பேணுதல் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தல் ஆகியவை குறித்தும் விவரித்தனர்.

இச்செயல்விளக்கத்தின் வாயிலாக, தண்டு துளைப்பான் பூச்சியின் தாக்குதலைக் குறைத்து, நெற்பயிரின் மகசூல் இழப்பைத் தவிர்த்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்ப தற்கான விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தினர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741